


புதுகை
# வரலாறு நாளிதழ்

www.varalaruu.com varalaruu 1 pudugaivaralaru varalaruu 7502051351




சனி ❖ மார்ச். 26, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 170 ❖ ரூ.5

துபாயில் நடைபெற்று வரும் உலக கண்காட்சியில் தமிழ்நாட்டின் அரங்கை திறந்து வைத்தார் மு.க.ஸ்டாலின்

# கனவு

## தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு நிலவும் சாதகமான சூழலை எடுத்துக் கூறி, ஐக்கிய அரபு அமீரகத்தின் அமைச்சர்களுக்கு அழைப்பு



**துபாய், மார்ச்.26-**

அரசு முறைப் பயணமாக துபாய் சென்றுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பாகஐக்கியஅரபுஅமீரக அமைச்சர்களை சந்தித்து ஆலோசனை நடத்தினார். வெளிநாட்டு வர்த்தகத்திற்கான அமைச்சர் தானி பின் அகமது அல் சியோதி, பொருளாதாரத் துறை அமைச்சர் அப்துல்லா பின் டுக் அல் மர்ரி ஆகியோர் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அப்போது, ஐக்கிய அரபு நாடுகளில் உள்ள சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே உள்ள வர்த்தக உறவுகளை மேம்படுத்துதல், விவசாயம், உணவுப் பதப்படுத்துதல், மின் வாகனங்கள், பொறியியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற துறைகளில் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு நிலவும் சாதகமான சூழலை எடுத்துக் கூறி, ஐக்கிய அரபு அமீரகத்தின் இரண்டு அமைச்சர்களையும் தமிழகம் வருமாறு மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்தார். சந்திப்பின் போது, அமீரக அரசு சார்பில் மு.க. ஸ்டாலினுக்கு நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. அதே போல், அமீரக அமைச்சர்களுக்கு ‘கருணாநிதி எ லைஃப்’ என்ற புத்தகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். சந்திப்பை தொடர்ந்து ட்விட்டரில் முதலமைச்சர் வெளியிட்ட பதிவில், நம்பர் 1 என்ற நிலையை தமிழ்நாடு அடைய ஐக்கிய அமீரகப் பயணம் உதவும் என்ற நம்பிக்கை, அந்நாட்டு அமைச்சர்களுடனான சந்திப்பில் வலுப்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் துபாய் எக்ஸ்போ 2020 கண்காட்சிக்கு சென்ற முதல்வர், இந்திய அரங்கை பார்வையிட்டு தமிழ்நாடு தளத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமீரக சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வுத்துறை அமைச்சர் ஷேக் நஹ்யான் பின் முபாரக் அல் நஹ்யான் கலந்துகொண்டு முதல் அமைச்சர் மு.க ஸ்டாலினை சந்தித்தார். தமிழ்நாடு தளத்தில் தொழில்துறை, மருத்துவம், சுற்றுலா, கலை, கலாசாரம், கைத்தறி, கைவினைப் பொருட்கள், ஜவுளி, தமிழ் வளர்ச்சி, தகவல் தொடர்பு, மின்னணுவியல், தொழிற் பூங்காக்கள், உணவுப் பதப்படுத்துதல் போன்ற முக்கிய துறைகளில் உள்ள சிறப்புகள் பற்றி விரிவாக பல்வேறு நாட்டு பிரதிநிதிகள் தெரிந்து கொள்ள உதவும் வகையிலான காட்சிமைப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப தமிழ்நாட்டின் சிறப்பை உலகிற்கு எடுத்துக்காட்டும் வண்ணமயமான காட்சிப் படங்கள் இந்த அரங்கில் தொடர்ச்சியாக திரையிடப்பட உள்ளன என்பது குறிப்பிடதக்கது.

## ஆவுடையார்கோவில் தாலுகா அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்



**ஆவுடையார்கோவில், மார்ச்.26-**

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் தாலுகா அலுவலகத்தில் நேற்று காலை 10 மணி அளவில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் வெள்ளைச்சாமி தலைமை தாங்கிகூட்டத்தை நடத்தினார். கூட்டத்தில் விவசாயிகள் பிரச்சனை பிரதானமாக பேசப்பட்டது.

இதில் சிபிஎம் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் சுப்ரமணியன் காப்பீடு செய்துள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் தொகை வழங்க வேண்டும் என்று பேசினார்.

தமிழ்நாடு விவசாய சங்க ஆவுடையார்கோவில் ஒன்றிய செயலாளர் கலந்தர் பேசும்போது ஆவுடையார்கோவில் மற்றும் சுற்று வட்டார பகுதியில் தெரு நாய்கள் அதிகமாகி பாதசாரிகள் மற்றும் மாணவ மாணவிகளை கடிப்பதும் அவர்கள் மருத்துவமனை செல்வதும் வழக்கமாக உள்ளது என்றும். ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையில் ஐந்து மருத்துவர்கள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும் என்றும் பேசினார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த நிர்வாகி சடயமங்கலம் துரைமாணிக்கம் பேசும்போது ஆவுடையார்கோவில் வழியாக செல்கின்றன வெள்ளாட்டிலிருந்து பூவலூர் வழியாகபொன்பேத்தி எரிக்கும், அங்கிருந்து தீயத்தூர் வழியாக திருபுனவாசல் பகுதிக்கும் கடைமடை காவிரி நீர் சென்று செல்ல வழிவகை செய்ய வேண்டும் என்றும் பேசினார் கூட்டத்தில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் நேற்று துபாய் பண்பாட்டு நீதி மையத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தின் பொருளாதாரத்துறை அமைச்சர் அப்துல்லா பின் டுக் அல் மர்ரியையும், ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளிநாட்டு வர்த்தகத் துறை அமைச்சர் டாக்டர் தானி பின் அகமது அல் சியோதியையும் சந்தித்து, பல்வேறு துறைகளில் தமிழகத்தில் முதலீடுகளை மேற்கொள்வது குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இந்த சந்திப்பின்போது, தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழில்துறை கூடுதல் தலைமை செயலாளர் கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் பூஜா குல்கர்னி, தமிழ்நாடு அரசு உயர் அலுவலர்கள், ஐக்கிய அரபு தமிழகத்திற்கான இந்திய தூதர் சஞ்சய் சுதீர், துணை தூதர் டாக்டர் அமன் பூரி, மற்றும் இந்தியாவிற்கான ஐக்கிய அரபு அமீரக நாட்டின் தூதர் அகமது அண்ணா ஆகியோர் உடனிருந்தனர்.



▶ மதுரை மாவட்டத்தில் கலைஞர் நினைவு நூலகத்தில் கட்டுமான பணிகளை நேற்று தமிழக அமைச்சர் எ.வ.வேலு. அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன், பி. மூர்த்தி, ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட கலெக்டர் அனீஷ் சேகர், எம்எல்ஏக்கள் தளபதி, தமிழரசி, பூமிநாதன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



▶ அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ பன்னீர்செல்வம் நேற்று ஜெயலலிதாவின் 64வது பிறந்தநாளை முன்னிட்டு அதிமுக மருத்துவ அணி சார்பில், சென்னை, சேத்துப்பட்டு, பெத்தானி மருத்துவமனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தமிழக மக்களுக்கு சேவை செய்துவரும் கிறிஸ்டியன் மிஷன் சாரிட்டபிள் ட்ரஸ்ட் டாக்டர் கோசிங் ரெடிட்க்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கி கவுரவித்தார். நிகழ்வில் மருத்துவ அணி செயலாளர் வேணுகோபால், வடசென்னை தெற்கு (மேற்கு) மாவட்ட செயலாளர் பாலகங்கா, மருத்துவர் அணி இணை செயலாளர் ஆதிரா நேவிஸ் பிரபாகர், துணை செயலாளர் ராமசாமி உள்ளிட்டோர் உள்ளனர்.




▶ இந்திய அஞ்சல் துறை சார்பாக புதுக்கோட்டை மாவட்ட நீதிமன்ற அலுவலக வளாகத்தில் நீதிபதியின் அறிவுறுத்தலின்படி அஞ்சலக ஆயுள் காப்பீடு சிறப்பு முகாம் கடந்த மார்ச் 21 முதல் நடைபெற்றது. விழாவிற்கு அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் தங்கமணி தலைமை ஏற்க புதுக்கோட்டை அரசு வழக்கறிஞர் சிவகுமார் முகாமை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு அஞ்சலக ஆயுள் காப்பீடு பத்திரங்களை வழங்கியும் சிறப்புரையாற்றினார். விழாவில் புதுக்கோட்டை தெற்கு உப கோட்ட அதிகாரி ராதை மற்றும் அஞ்சல் அலுவலர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். அஞ்சலக ஆயுள் காப்பீடு வளர்ச்சி அதிகாரி என்.பாரதிராஜன் நன்றியுரை கூறினார்.





▶ புதுக்கோட்டை நகராட்சி வெங்கப்பர் ஊரணிகுளம் மேம்பாடு செய்யும் பணியினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார். அருகில் புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், துணைத்தலைவர் லியாக்கத் அலி, நகராட்சி ஆணையர் நாகராஜன் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

# இன்று




## சிந்திப்போம்... செயல்படுவோம்..











| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | ரூ. 4,849 | ரூ. 5,248 |

## வரலாற்றில் இன்று



590 பேரரசர் மவுரிசு தனது மகன் தியோடோசியசை பைசாந்தியப் பேரரசின் இணைப் பேரரசராக அறிவித்தார்.

1027 இரண்டாம் கொன்ராட் புனித உரோமைப் பேரரசராக முடிசூடினார்.

1169 சலாகுத்தீன் எகிப்தின் தளபதியாக (அமீர்) நியமிக்கப்பட்டார்.

1431 பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் மீதான முன் விசாரணைகள் ஆரம்பமானது.

1484 வில்லியம் காக்ஸ்டன் ஈசாப்பின் நீதிக்கதைகள் நூலை மொழிபெயர்த்து வெளியிட்டார்.

1552 குரு அமர் தாஸ் சீக்கியரின் மூன்றாவது குருவானார்.

1812 வெனிசுவேலாவின் கரகஸ் நகர் 7.7 அளவு நிலநடுக்கத்தில் அழிந்தது.

1871 இலங்கையில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது. 2,405,287 பேர் பதிவாகினர்.[1]

1872 கலிபோர்னியாவில் லோன் பைன் என்ற இடத்தில் 7.2 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டது.

1913 முதலாம் பால்கன் போர்: பல்கேரியப் படைகள் ஆட்ரியானாபோல் நகரைக் கைப்பற்றின.

1917 முதலாம் உலகப் போர்: காசாப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது சமரில் பிரித்தானியப் படைகளின் முன்னேற்றம் சுமார் 17,000 துருக்கியர்களால் தடுக்கப்பட்டது.

1934 ஐக்கிய இராச்சியத்தில் வாகன ஓட்டுனர்களுக்கான சோதனை அறிமுகப்படுத்தப்பட்டது.

1942 இரண்டாம் உலகப் போர்: போலந்தில் அவுசுவிட்சு வதை முகாமிற்கு முதற்தடவையாக பெண் சிறைக்கைதிகள் கொண்டு செல்லப்பட்டனர்.

1945 இரண்டாம் உலகப் போர்: யப்பானுடனான இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்ததாக ஐக்கிய அமெரிக்கா அறிவித்தது.

1954 மார்சல் தீவுகளில் உள்ள பிக்கினி திட்டில் அணுகுண்டு சோதனை நடத்தப்பட்டது.

1958 ஐக்கிய அமெரிக்க இராணுவம் எக்ஸ்புளோரர் 3 விண்கலத்தை ஏவினர்.

# புதுக்கோட்டை மவுண்ட் சீயோன் சர்வதேசப்பள்ளியில் அறிவியல் மற்றும் அடல் ஆய்வககண்காட்சி



**புதுக்கோட்டை, மார்ச்.26–**

திருந்த மவுண்ட் சீயோன் சர்வதேசப் பள்ளியில்அறிவியல் மற்றும் அடல் ஆய்வககண்காட்சி பள்ளியின் தலைவர் ஜோனத்தன் ஜெயபாரதன்,துணைத் தலைவர் ஏஞ்சலின் ஜோனத்தன்,பள்ளியின் முதல்வர் ஜலாஜாகுமாரி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது..

விழாவில் பள்ளியின்தலைவர் பேசுகையில், மாணவர்கள் இந்தியாவின் வளர்ச்சியில் முக்கியபங்காற்றவேண்டும், அதற்கு அறிவியல் துறையில் சிறந்து விளங்கினால் தான் இயலும், அதற்குமாணவர்கள் இது போன்றஅறிவியல் கண்காட்சியில்அவர்களுடையஅறிவியல் கண்டுபிடிப்பைகாட்சிபடுத்த மற்றும் ஊக்கப்படுத்த இது ஒருவாய்ப்பாகும், கல்வி என்பது மாணவர்களின் சிந்தனையைத் தூண்டக்கூடிய ஒரு களம்,சிந்தனையை விரிவுபடுத்தவேண்டும் குறுகிய வட்டத்தில் இல்லாமல் சிறந்த சிந்தனையாளராக நம்மை மாற்றுவது கல்வி எங்குபடிக்கின்றோம் என்பதுமுக்கியம் அல்லஎப்படிபடிக்கின்றோம் என்பதேமுக்கியம் என்றுஉரையாற்றினார்.

பள்ளியின் துணைத் தலைவர், மாணவர்கள் தங்களுடைய இளம் வயதிலேயே கல்வியில் சிறந்து விளங்கவேண்டும். அதற்கு தகுந்த கல்வி நிறுவனத்தை தேர்ந்தெடுப்பது பெற்றோரின் கடமை, மேலும் தங்களுடைய குழந்தைகள் எந்த படிப்பில் ஆர்வமாகஉள்ளார்களோ அதில் அவர்களை ஊக்கப்படுத்தவேண்டும் என்றார்.

இறுதியில் பள்ளியின் முதல்வர்பேசுகையில், மாணவர்களின் ஆர்வத்தை பாராட்டியும் அவர்களை பள்ளிக்கு அனுப்பி வைத்த தலைமையாசிரியருக்கு நன்றியையும் தெரிவித்து, வரும் ஏப்ரல் 19-ம் தேதி பள்ளியில் நடைபெற இருக்கின்ற அடல் சம்மந்தமானமெகாகண்காட்சியில் அரசுபள்ளிமாணவர்களும் தங்களுடைய கண்டுபிடிப்புகளை காட்சிபடுத்தலாம் என்றார். மேலும்மாணவர்கள் இந்தியாநாட்டைஉலகஅரங்கில் வலிமைஉடையதாகவும் மற்ற நாட்டிற்கு வழிகாட்டியாக விளங்க செய்யவேண்டும் அதற்குமாணவர்கள் அனைத்து துறையிலும் சிறந்துவிளங்கவேண்டும் என்று கூறினார்.

பள்ளிமாணவர்கள் தங்களுடைய அறிவியல் கண்டுபிடிப்புகளை கண்காட்சியில் வைத்திருந்தனர், அதை மவுண்ட் சீயோன்பள்ளிமாணவர்கள்; அரசு பள்ளி மாணவர்களுக்குஅ தன் செயல்பாடுகள் மற்றும் பயன்களைஎடுத்துரைத்தனர். இந்நிகழ்ச்சியில் லெம்பலக்குடிஅரசுமேல்நிலைப்பள்ளி,நச்சாந்துபட்டி இராமநாதன் செட்டியார் மேல்நிலைப்பள்ளி,புலிவலம் அரசுநடுநிலைப்பள்ளி, நமணசமுத்திரம்மு.சி.த.முஉயர்நிலைப்பள்ளிமாணவ,மாணவிகள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகளை பள்ளிஅடல் ஆய்வகபொருப்பாளர் பியர்சன் பிரிஸ்ட்லி ஜாப் மற்றும் பள்ளி ஒருங்கிணைப்பாளர் சரண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்தனர்.

# புதுக்கோட்டை காச நோய் மையத்தில் உலக காசநோய் தினம் அனுசரிப்பு



**புதுக்கோட்டை, மார்ச்.26–**

புதுக்கோட்டையில் உலக காசநோய் தினம் புதுக்கோட்டை காசநோய் வையத்தில் அனுசரிக்கப்பட்டது.

புதுக்கோட்டை பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள காசநோய் மையத்தில் உலக காசநோய் தினம் மாவட்ட நல கல்வியாளர் விஜயன் வரவேற்புரையை ஆற்ற மாவட்ட ஊரக முகமை திட்ட இயக்குனர் கருப்பசாமி தலைமையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் பூவதி முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினர்களாக இணை இயக்குனர் ராமு, துணை இயக்குனர்கள் அருண்குமார், மலர்விழி, மாவட்ட மனநல திட்ட அலுவலர் கார்த்திக் தெய்வநாயகம், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மாமுண்டி நெஞ்சக நோய் பிரிவு மருத்துவ உதவி பேராசிரியர் மதியழகன், இந்திய மருத்துவர் சங்க தலைவர் சாமிநாதன், காசநோய் துணை இயக்குனர் சங்கரி ஆகியோர் திட்ட விளக்க உரையாற்றினார்கள். காச நோய் சம்பந்தமாக நடைபெற்ற கட்டுரை மற்றும் ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

குணமடைந்த காசநோய் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டது. தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்துடன் இணைந்து சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்கள், மருந்தகத்திற்கு பரிசுகள் வழங்கப்பட்டது. தேசிய காசநோய் உள்ளிட்ட பணியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. மாவட்ட அரசு மற்றும் தனியார் துறை ஒருங்கிணைப்பாளர் ஜீவபாரதி நன்றி உரையாற்றினார்.

# அறந்தாங்கியில் கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் விவசாயிகள் பயிற்சி



**அறந்தாங்கி மார்ச்.26–**

அறந்தாங்கி வட்டாரத்தில் 2021-2022ம் ஆண்டு கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் விவசாயிகள் பயிற்சி பெருங்காடு கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படும் பஞ்சாயத்துகளில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு அறந்தாங்கி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், பாஸ்கரன் தலைமை வகித்து இத்திட்டத்தில் ஒவ்வொறு குடும்ப தலைவருக்கு 3 தென்னங்கன்றகள் வழங்கப்படுவதாகவும், ஒரு பஞ்சாயத்திற்கு அதிகபட்சமாக 200 பண்ணைக்குடும்பங்களுக்கு வழங்க உள்ளதாகவும், மேலும் இத்திட்டத்தின் கீழ் ஜிப்சம், ஜிங்க் சல்பேட் 50% மானிய விலையில் வழங்க உள்ளதாகவும் எடுத்துக்கூறினார்.

பின்னர் இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் பாக்யா கலந்து கொண்டு மண் மாதிரி எடுத்தலின் முக்கியத்துவங்கள் பற்றி எடுத்துரைத்தார். மேலும் துணை வேளாண்மை அலுவலர் பாண்டிமுருகன் கலந்துகொண்டு இத்திட்டத்தில் ஊடுபயிராக உளுந்து சாகுடி செய்வதற்கு 50% மானியங்கள் குறித்தும் தார்பாய்கள், விகைத்தெளிப்பான்கள், கைத்தெளிப்பான்கள் 50% மானிய விலையில் வழங்க உள்ளதாகவும் எடுத்துக்கூறினார்.

இப்பயிற்சியில் சிறப்பு அழைப்பாளராக ஊராட்சி மன்றத்தலைவர் மல்லிகா, கலந்துகொண்டு சிறப்பரையாற்றினார். இறுதியில் வேளாண்மை உதவி அலுவலர் பிரியாலெட்சுமி நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அறந்தாங்கி வட்டார அலுவலக அலுவர்கள் ரவிராஜன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் மற்றும் ஆதிநாராயணன், குழந்தைசாமி, உதவி விதை அலுவலர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.

### ஆதனக்கோட்டையில்

# பங்குனித் திருவிழாவையொட்டி நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டு விழா



**ஆதனக்கோட்டை, மார்ச்.26–**

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டையில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் மோட்டு முனீஸ்வரர், இச்சடி முனீஸ்வரர் ஆலய பங்குனித்திருவிழாவினை முன்னிட்டு மாபெரும் ஜல்லிக்கட்டு விழா நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சி தலைவர் கவிதாராமு அறிவுறுத்தலின்படி, மாவட்ட வழங்கல் அலுவலர் கணேசன் ஜல்லிக்கட்டுப் போட்டியினை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில் 250 மாடுபிடி வீரர்கள் கலந்துகொண்டு ஜல்லிக்கட்டு உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இந்த விழாவில் திண்டுக்கல், திருச்சி, சிவகங்கை, திருப்பத்தூர், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் இருந்து காளைகள் களமிறங்கி விளையாடின, இதில் மாடுபிடி வீரர்கள் பல களைகளை அடக்கினாலும் சில காளைகள் மாடுபிடி வீரர்களுக்கு போக்குக் காட்டியது, இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் சிறப்பு காளையும் நாயும் நண்பர்களாக இருந்த நிலையில் காளையுடன் நாயும் போட்டியில் கலந்துகொண்டு இரண்டு நண்பர்களும் சீறிப்பாய்ந்தது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

வீரர்களுக்கும், மாட்டின் உரிமையாளர்களுக்கும் ரொக்கப்பணம் , சில்வர் குவளைகள், மின் விசிறி, வெள்ளிக்காசு போன்றவை பரிசாக வழங்கப்பட்டது. வருவாய்த் துறையின் சார்பில் வட்டாட்சியர் செந்தில்குமார், மண்டல துணை வட்டாட்சியர் கவியரசு , வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் மருத்துவத் துறை சார்பில் மருத்துவர் விமல்ராஜ் தலைமையில் மருத்துவ குழுவினரும் மாடுபிடி வீரர்களும் உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார்களா என்றும் மது அருந்தாமல் உள்ளார்களா என்று சோதனை செய்து மாடு பிடிக்க பரிந்துரை செய்தார்கள். கால்நடை துறை சார்பில் மண்டல இணை இயக்குனர் தலைமையில் மருத்துவர்கள் பிரசாத், தட்சிணாமூர்த்தி, தினேஷ் குமார், பிரகாஷ் ,செந்தில்குமார், ஆகியோர் கொண்ட குழுவினர் மாடுகளை பரிசோதனை செய்தனர். கந்தர்வகோட்டை இன்ஸ்பெக்டர் செந்தில்மாறன் தலைமையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் 690 காளைகள் பங்கேற்றன, 42 மாடுபிடி வீரர்களுக்கு காயம்பட்டது. இதில் 5 பேர் பலத்த காயம் பட்ட நிலையில் புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் இருவருக்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.


## காணவில்லை

புதுக்கோட்டை மாவட்டம் & குளத்தூர் தாலுகா, பூங்குடி கிராமத்தில் வசித்து வரும் கு.செந்தில்குமார் த/பெ.ஆர்.குமாரசாமி என்பவருக்கு சொந்தமான புதுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் பெற்ற அசல் பத்திர ஆவண எண் : 7764/2010 என்ற பத்திர ஆவணம் கடந்த 23.02.2022 அன்று முத்துடையான்பட்டியில் ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது காணாமல் போய்விட்டது. இதனைத்தொடர்ந்து பத்திரம் காணாமல் போனது குறித்து காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. புகார் எண் : CAK22038028. இச்சூழலில் மேற்கண்ட பத்திரத்தை யாரேனும் கண்டெடுத்தால் கு.செந்தில்குமார் த/பெ.ஆர்.குமாரசாமி, பூங்குடி, வெள்ளனூர் அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் என்ற முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்புக்கு
எம்.சிவக்குமார்.,பிகாம்பிஎல்,
அட்வகேட் & நோட்டரி பப்ளிக், புதுக்கோட்டை மாவட்டம்
செல்:9786122631


### புதுக்கோட்டை

# சந்தைப்பேட்டை அரசு மகளிர் பள்ளியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சி

**புதுக்கோட்டை, மார்ச்.26–**

புதுக்கோட்டை சந்தைப்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. அரசுப் பள்ளி மாணவிகளின் அறிவியல் அறிவை விரிவு செய்யவும், திறனை வெளிப்படுத்தவும், ஒவ்வொரு ஆண்டும் மாணவிகளுக்கான அறிவியல் கண்காட்சி நடைபெறும். அந்த வகையில் நேற்று புதுக்கோட்டை சந்தைப்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.

ஆறிலிருந்து பன்னிரெண்டாம் வகுப்பு மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தாங்கள் செய்த அறிவியல் செய்முறைகளை காட்சிப்படுத்தி பார்வையாளர்களுக்கும் பெற்றோர்களுக்கும் செய்முறை விளக்கங்களை சிறப்பாக செய்து காட்டினர். முன்னதாக அறிவியல் கண்காட்சியை பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் அஞ்சலிதேவி தங்கம் மூர்த்தி துவக்கி வைத்து பார்வையிட்டு மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தை பாராட்டி ஊக்கப்படுத்தினார். பள்ளியின் அறிவியல் கண்காட்சிக்கான ஏற்பாடுகளை பள்ளி தலைமை ஆசிரியை சு. சரிதா மற்றும் அறிவியல் ஆசிரியர் பிரமிளா ஆகியோர் செய்திருந்தனர். மேலும் இந்நிகழ்வில் ஆசிரியப்பெருமக்களும்



திரளான மாணவிகளும் பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

### தஞ்சாவூரில்

# பெண் காவலர்களின் வசதிக்காக தானியங்கி சானிடரி நாப்கின் வழங்கும் இயந்திரம் நிறுவப்பட்டது



**தஞ்சாவூர், மார்ச்.26–**

தஞ்சாவூர் மாநகர போக்குவரத்து ஒழுங்கு பிரிவு காவல் நிலையத்தில் தஞ்சை ஜோதி அறக்கட்டளை சார்பில் பெண் காவலர்களின் பயன்பாட்டிற்காக தானியங்கி சானிடரி நாப்கின் வழங்கும் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

இக்கருவியின் செயல்பாட்டை தஞ்சாவூர் உதவி காவல் கண்காணிப்பாளர் (பயிற்சி) பிருந்தா தொடங்கி வைத்து அதன் செயல்பாட்டை பெண் காவலர்களிடம் தெரிவித்தார்.

இதில் போக்குவரத்து ஆய்வாளர் ரவிச்சந்திரன்,ஜோதி அறக்கட்டளையின் செயலாளர் பிரபு ராஜ்குமார், களப்பணியாளர் சிவரஞ்சனி மற்றும் போக்குவரத்து பெண் காவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை பழைய வண்ணாரப்பேட்டை பங்குனி பொங்கல் திருவிழாவை முன்னிட்டு பரத நாட்டிய நிகழ்ச்சி



**சென்னை, மார்ச்.26–**

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை சிங்காரத்தோட்டத்தில் அமைந்துள்ள அருள்மிகு சின்ன சேனியம்மன், வடபத்ரகாளியம்மன் கோவில் 36ஆம் ஆண்டு பங்குனி பொங்கல் திருவிழாவை முன்னிட்டு ப்ஸ்ரீ சாய் நாட்டியாலயாவின் பரத நாட்டிய நிகழ்ச்சி கோவில் வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ப்ஸ்ரீ சாய் நாட்டியாலயா பள்ளியின் ஆசிரியர் குரு திவ்ய ப்ஸ்ரீ பாபு, வழிகாட்டுதழின் படி ஸ்ரீ சாய் நாட்டியாலயா மாணவிகள் சாய் நந்திதா,ஸ்நேஷா, மகாலட்சுமி,நிவேதிகா ஸ்ரீ,ஆதிலட்சுமி, ஸ்ரீ திவ்யா, மோனிகா, தியா, கார்னிகா, சுசித்ரகலா, சாதனா ஸ்ரீ மாணவிகள் பரத நாட்டிய கலை நிகழ்ச்சிகளை சிறப்பாக நிகழ்த்தி காட்டினர்.

இதனையடுத்து பரத நாட்டிய கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்திகாட்டிய மாணவிகளுக்கு அருள்மிகு சின்னசேனியம்மன் ஆலய நிர்வாகிகள் கேடயங்கள், பிரசாதபைகள் வழங்கி விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியில் பெற்றோர்கள் பக்தர்கள் பலர் பங்குகொண்டு கலைநிகழ்ச்சிகளை கண்டு ரசித்தனர்.

# திருவள்ளூரில் அலமாதி கிராமத்தில் 25 லட்சம் மரங்கள் நடும் பணி தொடங்கியது அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கல்வெட்டை திறந்து வைத்தார்




**திருவள்ளூர், மார்ச்.26–**

இந்தியாவின் தலைசிறந்த எஃப்எம்சிஜி நிறுவனங்களில் ஒன்றான - எச்சிசிபி (ஹிந்துஸ்தான் கோகோ-கோலா- பெவரேஜஸ்) - 25 இலட்சம் மரங்களை நட்டு அதன் 25 வது ஆண்டை கொண்டாடுவதாக அறிவித்தது. பிப்ரவரி 14, 1997 இல் இணைக்கப்பட்ட எச்சிசிபி, பான் இந்தியாவை இயக்குகிறது மற்றும் நாட்டின் மிகப்பெரிய தூய்மையான பான உற்பத்தி நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் சார்பாக திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் அலமாதி கிராமத்தில் 25 லட்சம் மரங்கள் நடும் பணி தொடங்கியது. இதில் சுற்றுச்சூழல், மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் முன்னிலையில் கல்வெட்டை திறந்து வைத்து ஆயிரக்கணக்கான தன்னார்வலர்கள், எச்சிசிபி ஊழியர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், சமூகப் பெரியவர்கள், கிராம மக்கள், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் வனத்துறை அதிகாரிகள் ஒன்று கூடி அலமாதியில் 10 ஏக்கர் வறண்ட நிலத்தில் 10,000 மரக்கன்றுகளை நட உள்ளனர்.

இந்த நிகழ்வானது, ஐநாவால் அறிவிக்கப்பட்ட மற்றும் 2012 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச காடுகளின் தினத்தை எச்சிசிபி இன் நினைவாகக் குறிக்கிறது. இந்த நிகழ்ச்சியில் மாதவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், திருவள்ளூர் மாவட்ட வன அலுவலர், கே ராம் மோகன், ஐஎஃப்எஸ்; சோழவரம் திமுக ஒன்றிய துணைத் தலைவர் கர்ணாகரன் ஒன்றிய தலைவர் ராசாத்தி செல்வசேகரன், சோழவரம் ஒன்றிய திமுக அவைத்தலைவர் காசிம் முகம்மது அலமாதி ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ்வாணன், அலமாதி ஊராட்சி துணைத் தலைவர் ஜெயலட்சுமி முனுசாமி மற்றும் திமுக கட்சி நிர்வாகிகள் மு.கீதா ராமன் மற்றும் திமுக கட்சி நிர்வாகிகள், அலமாதி ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு இந்த நிகழ்வை சிறப்பித்தனர்.

# ஆரணி கூட்டுறவு வங்கியில் பேரூராட்சி கவுன்சிலரின் கணவர் அதிகாரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு



**ஊத்துக்கோட்டை, மார்ச்.26–**

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி பஜார் வீதியில் கூட்டுறவு வங்கி ஒன்று இயங்கி வருகிறது.இந்நிலையில், தமிழக அரசு ஐந்து சவரனுக்கு குறைவாக கடன் பெற்றவர்களுக்கு கடன் தொகையை தள்ளுபடி செய்வதாக தமிழக அரசு அறிவித்தது. எனவே, இந்த வங்கியில் கடன் பெற்ற 208 பயனாளிகளுக்கு ரூ.ஒரு கோடியே 8 லட்சம் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையில்,கடன் பெற்ற பயனாளிகளுக்கு சான்றிதழ்களையும், நகைகளையும் வழங்கும் நிகழ்ச்சி நேற்று செயல் அலுவலர் ராஜசேகர் முன்னிலையில் நடைபெற்றது.

இதில், சோழவரம் ஒன்றிய திமுக செயலாளர் செல்வசேகரன், ஆரணி பேரூர் திமுக செயலாளர் ஜி.பி.வெங்கடேசன்,ஆரணி பேரூராட்சி மன்றத்தலைவர் ராஜேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு கடன் தள்ளுபடி சான்றிதழ்களையும், நகைகளையும் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் பேரூர் திமுக செயலாளர்கள் பி.முத்து,டி.கண்ணதாசன், முன்னாள் பேரூராட்சி கவுன்சிலர் கு.கரிகாலன்,டி. ஜெயக்குமார் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதன் பின்னர், அங்கு வந்த ஆரணி பேரூராட்சி துணை தலைவர் வக்கீல் சுகுமார் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுக்கும், தொகுதியின் சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் துரை சந்திரசேகர் ஆகியோருக்கு முறையான அழைப்பு விடுக்கவில்லை என கூட்டுறவு சங்க செயல் அலுவலர் ராஜசேகரிடம் சரமாரியாக கேள்வி எழுப்பினார். அப்பொழுது அங்கு வந்த ஆரணி பேரூராட்சியில் 2-வது வார்டு உறுப்பினர் கௌசல்யாவின் கணவர் தினேஷ் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

மேலும்,அறிவிக்கப்படாத மின்வெட்டு ஏற்பட்டதால் கூட்டுறவு வங்கி அலுவலகத்தில் பேன் வசதியும் செய்யவில்லை. இதனால்,இந்நிகழ்ச்சிக்கு வந்த பயனாளிகள் காற்று வசதியும் இல்லை. கவுன்சிலர் கணவரின் வாக்குவாதம் ஒருபுறம் தொடர்ந்ததால் செய்வது அறியாமல் வாக்களித்த மக்கள் புலம்பிய வண்ணம் அலுவலகத்தை விட்டு வெளியேறினர்.இதனால் இப்பகுதியில் பதட்டமும் பரபரப்பும் நிலவியது.

# அரியலூரில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம்




**அரியலூர், மார்ச்.26–**

அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி தலைமையில் நேற்று நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அரியலூர் மாவட்டத்திற்கு ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் பல்வேறு செயலாக்க துறைகள் மூலம் திட்டங்களின் செயல்பாட்டை மாவட்ட அளவில் அலுவலர்களைக் கொண்டு கண்காணிக்க குழு நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்ட குழுக்கள் அரியலூர் மாவட்டத்திற்கு வருகை தந்துள்ளது.

இந்த கண்காணிப்பு குழுவினர் அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்திற்கு வருகை தந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்கள். இக்குழுவினர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மாவட்ட பஞ்சாயத்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தாட்கோ, ஆதிதிராவிடர் நலத்துறை, வேளாண்மைத்துறை, வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, மீன்வளத்துறை, கால்நடைப்பராமரிப்புத்துறை, வருவாய்த்துறை, மகளிர் திட்டம், மாவட்ட தொழில் மையம், மக்கள் நல்வாழ்வுத் துறை, மாவட்ட சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகள், செலவு செய்யப்பட்ட விபரம், பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை உள்ளிட்ட பல்வேறு தகவல்களை அரியலூர் மாவட்டத்தில் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கையாக அளிக்க உள்ளார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் மேற்கண்ட துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விபரங்களை கண்காணிப்பு குழுவினர்கள் ஆய்வு செய்ய வரும் பொழுது ஒவ்வொரு குழுக்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பு அலுவலர்கள் உடன் செல்வதுடன், சம்மந்தப்பட்ட துறையினர் கண்காணிப்பு குழுவிடம் தகவல்களை உரிய முறையில் வழங்கி, ஆய்வுகளுக்கு முழு ஒத்துழைப்பினை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் வழங்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை இணை ஆணையர் கருணாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத்திட்ட இயக்குநர் சு.சுந்தர்ராஜன், மகளிர் திட்ட இயக்குநர் சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# விசாரணைக்கு ஆஜராக மறுப்பு தெரிவித்த நடிகை மீரா மிதுனை நீதிமன்ற காவலில் அடைக்க உத்தரவு

**சென்னை, மார்ச்.26–**

வழக்கு விசாரணைக்கு ஆஜராகாததால் கைது செய்யப்பட்ட நடிகை மீரா மிதுனை ஏப்ரல் 4 ஆம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பட்டியலினத்தவர்கள் குறித்து சமூக வலைதளங்களில் அவதூறு கருத்துகளை தெரிவித்ததாக விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் அளிக்கப்பட்ட புகாரில், நடிகை மீரா மிதுன் மற்றும் அவரது நண்பர் சாம் அபிஷேக் ஆகியோரை சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசார் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் கைது செய்தனர். பின்னர் இருவரும் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த முறை இந்த வழக்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது இருவர் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அப்போது மீரா மிதுன் ஆஜராகவில்லை. இதையடுத்து, அவருக்கு எதிராக ஜாமீனில் வர முடியாத பிடிவாரண்ட் பிறப்பித்து நீதிபதி அல்லி உத்தரவிட்டார்.இதையடுத்து நேற்று மீரா மிதுனை கைது செய்த காவல்துறையினர் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அவரை ஆஜர் படுத்தினர்.

அப்போது, தன்னுடைய உடல் நிலை பாதிக்கபட்டிருந்த காரணத்தினால் தன்னால் விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை எனவும் தனக்கெதிரான பிடிவாரண்டை திரும்ப பெற வேண்டும் என மீரா மிதுன் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதற்கு காவல்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சுதாகர் எதிர்ப்பு தெரிவித்தார். இதையடுத்து, மீரா மிதுனை ஏப்ரல் 4ம் தேதி வரை நீதிமன்ற காவலில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

# தமிழக மக்களை முட்டாளாக்குவதற்கே திராவிட மாடல் பட்ஜெட் பாஜக தலைவர் அண்ணாமலை விமர்சனம்

**சென்னை, மார்ச்.26–**

தமிழக அரசின் பட்ஜெட்டை கண்டித்து சென்னைவள்ளுவர் கோட்டத்தில் பாஜகசார்பில் நேற்றுகண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய மாநில தலைவர் அண்ணாமலை, தமிழக மக்களை முட்டாளாக்குவதற்கே திராவிட மாடல் பட்ஜெட் போடப்பட்டுள்ளது என்று விமர்சித்தார்.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் மாநில தலைவர் கே. அண்ணாமலை தலைமை தாங்கினார். இதில் ஏராளமான பாஜகவினர் பங்கேற்று தமிழக அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தின்போது அண்ணாமலை பேசியதாவது:- தாலிக்கு தங்கம் திட்டம் அற்புதமான திட்டம். அதை உயர் கல்வி திட்டமாக மாற்றியுள்ளனர். முதலில் இருந்த திட்டத்தால் 10-ம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு ஒரு சவரன் தங்கமும் 25 ஆயிரம் ரூபாய் பணமும் கொடுக்கப்பட்டது.

இதன் மூலம் ரூ. 65 ஆயிரம் வரை கிடைக்கும். பட்டதாரி என்றால் ரூ. 50 ஆயிரம் வழங்கப்படும். இதன் மூலம் 90 ஆயிரம் வரை ஒரு பெண்ணுக்கு கிடைக்கும். இதை ரத்து செய்துள்ளார்கள்.

புதியதிட்டத்தின்படி உயர்கல்விக்கு செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ. 1000 கிடைக்கும் என்கிறார்கள். இதன் மூலம் ரூ. 36 ஆயிரம் மட்டுமே கிடைக்கும். சென்னையில் ஒருபக்கம் பூங்காவை உருவாக்குகிறார்கள். அதேநேரம் குப்பை கிடங்குகளும் அதிகரித்துக் கொண்டே போகிறது. பின்னர் சென்னை மக்களின் வாழ்க்கைத் தரம் எப்படி உயரும்? தமிழக மக்களை முட்டாளாக்குவதற்கே திராவிட மாடல் பட்ஜெட் போடப்பட்டுள்ளது.இவ்வாறு அண்ணாமலை பேசினார்.







# திருவள்ளூர் அருகே திருமழிசையில் ஜெகந்நாத பெருமாள் மற்றும் திருமழிசை ஆழ்வார் திருக்கோவிலில் மகா கும்பாபிஷேக விழா

**திருவள்ளூர், மார்ச்.26–**

திருவள்ளூர் மாவட்டம், சென்னை, பூந்தமல்லியை அடுத்த திருமழிசையில், ஜெகந்நாத பெருமாள் மற்றும் திருமழிசை ஆழ்வார் திருக்கோவிலில் மகா கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் இந்த கோவிலில் திருப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து, பல்வேறு ஹோமங்கள், சிறப்பு பூஜைகள் தினமும் நடந்து வந்தன. ஜெகந்நாத பெருமாள், திருமழிசை ஆழ்வார், திருமங்கை வல்லி தாயார், அழகிய சிங்கர், கண்ணன், கருடாழ்வார், அனுமன், மணவாளமாமுனி மற்றும் விமான இராஜ கோபுரங்களுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து, திருவாராதனம், பிரபந்த சாற்றுமறை, தீர்த்த பிரசாத விநியோகமும், சிறப்பு அன்னதானமும் நடைபெற்றது. அன்று மாலை அழகியசிங்கர் வீதி புறப்பாடும், ஜெகந்நாத பெருமாள் மற்றும் திருமழிசை ஆழ்வார் வீதி உலாவும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய விழாக்குழுவினர் மற்றும் இணை ஆணையர் லக்ஷ்மணன், நிர்வாக அதிகாரி பெ.சரவணன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். விழாவில், காங்கிரஸ் கட்சியின் திருவள்ளூர் தெற்கு மாவட்ட தலைவர் ரமேஷ், திருமழிசை பேரூராட்சி மன்றத் தலைவர் உ.வடிவேலு, திருமழிசை பேரூர் கழக செயலாளர் தி.வே. முனுசாமி உள்ளிட்ட ஏராளமான முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# சுயமரியாதை திருமணங்களுக்கு நாடு முழுவதும் சட்டப்பூர்வ அங்கீகாரம் மக்களவையில் திமுக வலியுறுத்தல்

**டெல்லி, மார்ச்.26–**

நாடு முழுவதும் சுயமரியாதை திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்க வேண்டுமென மக்களவையில் திமுக எம்பி தமிழச்சி தங்க பாண்டியன் வலியுறுத்தினார்.

மக்களவையில் நேற்று பூஜ்ய நேரத்தில் பேசிய திமுக எம். பி, தமிழச்சி தங்க பாண்டியன், “சுயமரியாதை இயக்கத்தின் மூலம் நடந்த முக்கிய சமூக மாற்றங்களில் சுயமரியாதை திருமண முறையும் ஒன்று. வழக்கமான திருமணங்களில் பிராமண புரோகிதர்கள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவர்கள் தேவையற்ற சடங்குகளை வற்புறுத்துகிறார்கள். இதனால் குடும்பங்கள் கடன் வலையில் சிக்குகின்றன. வரதட்சணை கொடுமையும் மிக அதிகமாக இருந்தது.

பிராமண புரோகிதர்கள் இல்லாமல் திருமணங்களை நடத்தினால் மட்டுமே தேவையற்ற சடங்குகளையும், செலவுகளையும் தவிர்க்க முடியும் என நினைத்து சுயமரியாதை திருமணத்தை பெரியார் பரிந்துரைத்தார். இந்தியாவில் முதல் மாநிலமாக, தமிழகத்தில் முன்னாள் முதலமைச்சர் அண்ணாவால் சுயமரியாதை திருமணங்களுக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டது’ எனத் தெரிவித்தார். மேலும், சுயமரியாதை இயக்கம் சாதிகளுக்கு இடையிலான திருமணங்கள், விதவை மறுமணங்களை ஊக்குவித்தது. 11 வயதில் விதவையான சிவகாமி அம்மையார் போன்றோர் மறுமணக் கொள்கையால் புதுவாழ்வு பெற்றதாக கூறிய அவர், சுயமரியாதை திருமணங்கள் 1928 முதல் நடைமுறையில் இருந்தாலும், பிராமண புரோகிதர் இல்லாமல் நடத்தப்படும் இந்து திருமணங்களை சட்டப்பூர்வமாக்கிய முதல் மாநிலம் தமிழ்நாடுதான் என் பேசினார்.

இந்தியாவில் நமிதா திருமண அமைப்பின் கீழ் சுயமரியாதை திருமணங்களை நாடு முழுவதும் அங்கீகரிக்க வேண்டும் எனவும் மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ஆலங்குடி அருகே கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம் 108 ஆம்புலன்ஸை கொடியசைத்து துவக்கி வைத்தார் எம்எல்ஏ முத்துராஜா



**ஆலங்குடி, மார்ச்.26–**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட வாராப்பூர் ஊராட்சியில் தலைவர் கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ திட்டம் நடைபெற்றது. வருமுன் காப்போம் திட்ட துவக்க விழாவில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

தமிழக முதல்வர், புதுக்கோட்டை சட்ட மன்ற உருப்பினர், வாராப்பூர் ஊராட்சி மன்றத் தலைவர் , அனைவரிடமும் 2019 முதல் பொதுமக்கள் வைத்த கோரிக்கையின் விளைவாக வாராப்பூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தமிழக அரசால் வழங்கபட்ட புதிய ஆம்புலன்ஸ் சேவையை,மருத்துவ முகாமில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை. முத்துராஜா கொடியசைத்து துவக்கி வைத்தார்.மேலும் அவர் வாராப்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் இருந்து, வாராப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வரை சுமார் 1 -கிலோ மீட்டர் 108 ஆம்புலன்ஸை ஓட்டிச்சென்று மருத்துவமனையில் நிறுத்தினார். அப்போது மக்கள் அனைவரும் கைத்தட்டி உற்சாகப்படுத்தி எம்எல்ஏ-க்கு மரியாதை செய்தனர்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக புதுக்கோட்டை ஒன்றியக் கழகச்செயலாளர் ராமகிருஷ்ணன், மாவட்ட சேர்மன் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், ,வாராப்பூர் ஊராட்சி மன்றத் தலைவர் பசுமை தேசம் சதீஸ்குமார், ஒன்றிய கவுன்சிலர் வெண்ணிலா, சுகாதாரத்துறை அதிகாரிகள் ,பணியாளர்கள் கழக மாநில மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள்,ஊராட்சிமன்ற உறுப்பினர்கள்,ஊராட்சி பணியாளர்கள்,ஊடக நண்பர்கள் ஊராட்சி பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர். விழா ஏற்பாடு மற்றும் உணவு ஆகியவற்றை வாராப்பூர் ஊராட்சி மன்றத்தலைவர், பசுமை தேசம் சதீஸ்குமார் மற்றும் பணியாளர்கள் ஊர் முக்கியஸ்தர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் ஊராட்சி ஒன்றியம், முனசந்தை நடுநிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சுற்றுச்சுவரினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று திறந்து வைத்தார். அருகில் கலெக்டர் கவிதா ராமு, யூனியன் சேர்மன் மேகலா முத்து, துணை இயக்குனர் சுகாதாரப்பணிகள் அர்ஜுன்குமார், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் ராமலிங்கம், ஊராட்சி மன்ற தலைவர் சுப்பிரமணியன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.



தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில் தஞ்சாவூர் ஆர்.வி.எஸ் வேளாண் கல்லூரியில் இளங்கலை வேளாண்மை 4ஆம் ஆண்டு பயிலும் மாணவிகளாகிய கு.பிரித்திகா , இரா. ராஜ அபிநயா , வை.வே. ராஜ கமலினி , பி. ரம்பிகா நாச்சியார் , ரமினேனி பாக்கிய சரலா , ர.ரசிகா , வி. சாய் சங்கவி , மா.சங்கீதா , ஜெ. சசிரேகா , கு. சாந்தினி ஆகியோர் உதவி பேராசிரியரான குணா தலைமையில் ஊரக அனுபவ பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதன் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சி நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ராணி தலைமையில் உலக நீர் தினத்திற்கான விழிப்புணர்வு உரை மற்றும் அவிநயக்கூத்தாட்டம் மூலம் தண்ணீரின் முக்கியத்துவத்தை பற்றி மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# அரியலூரில் கேஸ் சிலிண்டர் விலை உயர்வை கண்டித்து மகளிர் காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம்



**அரியலூர், மார்ச்.26–**

கேஸ் சிலிண்டர் விலை உயர்வை கண்டித்து, அரியலூரில் மகளிர் காங்கிரஸ் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

கேஸ் சிலிண்டர் விலை உயர்வுக்கு காரணமான மத்திய அரசை கண்டித்து, அரியலூர் பேருந்து நிலையம் அருகே, மகளிர் காங்கிரஸ் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, அரியலூர் மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி மாரியம்மாள் குமார் தலைமை வகித்தார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில், காங்கிரஸ் கட்சியின் அரியலூர் நகர தலைவர் எஸ். எம். சந்திரசேகர், மகிளா காங்கிரஸ் நிர்வாகிகள் முத்தமிழ் செல்வி, நவீனா, மகாலட்சுமி, பூங்கொடி, தேவகி, லட்சுமி, காந்திமதி, உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.


தயாரிப்பு விலையில்... தங்க நகைகள்...!

ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்

தங்க நகை தயாரிப்பு கூடம்

TS.NO.3208 கீழராஜ வீதி,
புதுக்கோட்டை – 1.
தொடர்புக்கு : 98433 07916, 04322 – 233544.


| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | ரூ. 4,849 | ரூ. 5,248 |



புதுக்கோட்டை பேலஸ் சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக உலக காசநோய் விழிப்புணர்வு கருத்தரங்கம் சந்தைப்பேட்டை மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. புதுக்கோட்டை பேலஸ் சிட்டி ரோட்டரி சங்கத் தலைவர் துரை மணி தலைமையில் நடைபெற்றது. டீம் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் மேலாண்மை இயக்குனர் தனசேகரன் சிறப்புரையாற்றினார் மாணவிகளுக்கு காசநோய் குறித்த வினாடி வினா போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன, காசநோய் விழிப்புணர்வு குறித்த துண்டு பிரசுரமும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியை சரிதா வாழ்த்துரை வழங்கினார், துணை தலைமை ஆசிரியர் பரமசிவம், ஆசிரியைகள் சுமதி, ராதிகா, சித்ரா தேவி மற்றும் மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர், நிறைவாக சங்க செயலாளர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

## புதுக்கோட்டை ஜெ.ஜெ.கல்லூரியில்

# இந்திய நிறுவன செயளாலர்களின் நிறுவனத்துடன் புரிந்த்துணர்வு ஒப்பந்தம்



**புதுக்கோட்டை, மார்ச்.26–**

ஜெ.ஜெ.கலை அறிவியல் கல்லூரியில் வணிகவியல் கணினி பயன்பாட்டியல் துறையின் சார்பாக ஒன்றிய அரசின் பொருந்து வனநிலவரம் அமைச்சகத்துடன் சேர்ந்த இந்திய நிறுவன செயளாலர்களின் நிறுவனத்துடன் ஒரு புரிந்த்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

முதலில், காத்துன் ஜமிமா பேகம், செயலர், பூம்ஸ் கிலப் அனைவரையும் வரவேற்று பேசினார். அதனை தொடர்ந்து இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்பெனி செக்ரட்டரிஸ் ஆஃப் இந்தியா வின் மதுரை பிரிவு நிறுவன செயளாலர் சங்கர் மகேஷ், பாடத்தின் முக்கியத்துவம் மற்றும் இத்துறையில் வேலைவாய்ப்பு பற்றியும் விளக்கினார். மேலும் இதில் ஏற்பட்டுள்ள மாணவர்களின் சந்தேகங்களுக்கு உரிய விளக்கமளித்தார்.

மேலும் இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்பெனி செக்ரட்டரிஸ் ஆஃப் இந்தியா வின் மதுரை பிரிவு பொறுப்பாளர் டி. ராஜா, அவருடைய உறையில் மாணவர்களின் எதிர்காலம் பற்றியும், சிஐஎஸ்ஐயின் பாடதிட்டம் பற்றி மாணவர்களிடையே உறையாடினார். கல்லூரி அறங்காவளர் சு.கவிதா தலைமை உறையாற்றினார்.

கல்லூரி முதல்வர் முன்னிலையில் வணிகவியல் கணினி பயன்பாட்டில் துறை தலைவரும் , இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்பெனி செக்ரட்டரிஸ் ஆஃப் இந்தியா, மதுரை பிரிவு, தலைவரும் புரிந்த்துணர்வு ஒப்பந்தத்தில் கையெலுத்திட்டனர். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மாணவர்களை தொழில்முறை தேர்வில் ஈடுபட ஊக்குவிக்கும் மற்றும் அவர்களின் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும்.

இறுதியில் லியோ பிராங்க்ளின், வணிகவியல் கணினி பயன்பாட்டில் துறைஉதவி பேராசிரியர் அனைவருக்கும் நன்றி கூற நிகழ்ச்சி நிறைவுற்றது.

# புதுக்கோட்டையில் தேய்பிறை அஷ்டமி காலபைரவருக்கு சிறப்பு வழிபாடு



**புதுக்கோட்டை, மார்ச்.26–**

புதுக்கோட்டை அருள் மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் பங்குனி மாத வெள்ளிக்கிழமை சேர்ந்துவரும் தேய்பிறை அஷ்டமி யை யொட்டி நேற்று ஆலயத்திலுள்ள காலபைரவருக்கு சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

காலையில் காலபைரவருக்கு பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள் நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடந்தது, பக்தர்கள் வந்திருந்து வழிபட்டனர், அனைவர்க்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது, விழா ஏற்பாடுகளை பாலு அய்யர் மற்றும் கோயில் ஊழியர்கள் சிறப்புடன் செய்திருந்தனர்.

தேய்பிறை அஷ்டமி காலபைரவர் சிறப்பு வழிபாடு பற்றி பாலு அய்யர் கூறும்போது, பைரவரின் சன்னிதானத்திற்கு முன்பாக புஷ்பங்களை வைத்து, தீபம் ஏற்றி பைரவரிடம் பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும். 'ஓம் பைரவாய போற்றி!' என்ற மந்திரத்தை உச்சரித்து மனதை ஒரு நிலைப்படுத்தி தியானம் செய்யும்போது நம் மனதில் இருக்கும் தேவையற்ற பயம், குழப்பங்கள், அனைத்தும் நீங்கி, மனம் தெளிவு பெறும். உற்சாகத்தோடு நம்முடைய வேலையில் ஈடுபடுவதற்கு தேவையான மன தைரியம் கிடைக்கும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம். பொதுவாகவே பைரவர் வழிபாடு என்றால் அது மாலை நேரத்தில் செய்யக்கூடிய வழிபாடாக தான் இருக்கும். இருப்பினும் வெள்ளிக்கிழமையுடன் சேர்ந்து வந்திருக்கும் இந்த தேய்பிறை அஷ்டமி தினத்தில், ராகுகால நேரத்தில் பைரவரை வழிபாடு செய்வது என்பது சிறப்பாகஇருக்கும் என்று கூறினார்.


## அரியலூர் ஊராட்சி ஒன்றியம்

ந.க.அ2/638/2020
நாள் : 23.03.2022

### ஏல அறிவிப்பு

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட திருச்சி சாலையில் உள்ள பாரத ஸ்டேட் பேங்க் அருகில் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கடை எண்.6க்கு மட்டும் வருகின்ற 28.03.2022 அன்று காலை 11.00 மணியளவில் அரியலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டமன்றத்தில் ஏலம் நடைபெற உள்ளது.

ஏலம் கேட்பவர்கள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஏலம் கேட்கலாம்.

**நிபந்தனைகள் :**

1. சொத்து மதிப்பு சான்றிதழ் 01.04.2021க்கு பின்னர் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.
2. ஏற்கனவே சொத்து மதிப்பு (சால்வன்சி) 2.00 லட்சத்திற்கு குறையாமல் இருக்குமானால் அதற்குரிய வில்லங்க சான்று பெறப்பட்டு வழங்க வேண்டும்.
3. ஏலம் முன் வைப்புத் தொகை கடைக்கு முன்பணமாக ரூ.20,000/- ரொக்கமாக மற்றும் சொத்து மதிப்பு சான்று உடன் 28.03.2022 காலை 11.00 மணிக்குள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தொகை செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.
4. முன்வைப்பு தொகை மற்றும் சொத்து மதிப்பு சான்று சமர்பிக்காதவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
5. ஏலம் மூன்று ஆண்டு காலத்திற்கு விடப்படும்.
6. ஏலம் குறைந்தபட்ச மாத வாடகை ரூ.3000 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
7. உயர்ந்த பட்சத் தொகைக்கு ஏலம் கேட்பவர்களுக்கு ஏலம் ஊர்ஜிதம் செய்யப்படும்.
8. ஏலம் ஊர்ஜிதம் செய்த பிறகு இரண்டாவது ஆண்டுக்கு 10% தொகை உயர்த்தி செலுத்த அனுமதிக்கப்படும்.
9. மூன்றாவது ஆண்டுக்கு 10% தொகை உயர்த்தி செலுத்த அனுமதிக்கப்படும். மேலும், அந்தந்த ஆண்டுக்குள் தொகையை செலுத்தி புதுப்பித்து கொள்ள வேண்டும்.
10. ஏலம் எடுத்தவுடன் ஏலத் தொகையுடன் 12% சேவை வரி உடன் செலுத்தப்பட வேண்டும்.
11. ஏலத் தொகையினை ஏலம் விடப்பட்ட அன்று மாலையே ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.
12. ஏலம் முடிவான 24 மணி நேரத்திற்குள் கடையின் பழைய ஏலதாரர் கடையிலிருந்து பொருட்களை அப்புறப்படுத்தி கொள்ள வேண்டும்.
13. ஏலம் எடுத்தவர்கள் தவிர, மற்றவர்களுக்கு கடை நடத்த அனுமதிக்க கூடாது.
14. உரிய விதிமுறைகளுக்குட்பட்டு ஏலம் விடப்படும்.
15. வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அவரது அலுவலர்களும் நிர்வாகத்தின் அவசியத்தை முன்னிட்டு அவ்வப்போது கொடுக்கும் உத்தரவுகள் படி நடந்து கொள்ள உரிமைதாரர் கட்டுப்பட்டவராவார்.
16. ஏலத்தை ரத்து செய்யவோ வேறு ஒரு தேதியில் ஏலத்தை மாற்றி வைக்கவோ வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அதிகாரம் உண்டு.
17. ஏலம் நடக்கும் காலத்திலோ பிறகோ எந்த நிலையிலும் நிபந்தனைகளை தளர்த்தவோ, மாற்றவோ, நீக்கவோ ஏல பொறுப்புத் தொகையை உயர்த்தவோ அல்லது உரிமைக் காலத்தை குறைக்கவோ வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அதிகாரம் உண்டு.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)(பொ),
அரியலூர்.


# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற சைபர் கிரைம் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி



**புதுக்கோட்டை, மார்ச்.26–**

புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் சைபர் கிரைம் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் தலைவர் ஆர் ஏ குமாரசாமி தலைமை வகித்தார் கல்லூரியின் முதல்வர் ஆர்.ஜீவானந்தம் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சைபர் கிரைம் காவல் ஆய்வாளர் கவிதா கலந்துக்கொண்டு சைபர் கிரைம் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு கையேடுகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கி பேசினார்.

அவர்பேசுகையில் செல்போனில் ஆன்லைன் விளையாட்டு விளையாடும்போது ஏற்படும் சைபர் கிரைம் குற்றங்கள் குறித்தும், செல்போனில் ஆன்லைன் விளையாடும்போது வரும் தேவை இல்லாத லிங்கை, கிளிக் செய்ய வேண்டாம் என்றார்.

மொபைல் போனை ஆன்லைன் வகுப்புகளில் படிப்பதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும், மொபைல்போனில் தவறுதலாக மெசேஜ் வந்தால், பெற்றோரிடம் கூறி காவல் நிலையத்திற்கு தெரியப்படுத்த வேண்டும், இணையதளம் மூலம் நிதி மோசடி, சமூக வலைதளங்களை எப்படி கையாளுவது என்பது பற்றியும், பின் சைபர் கிரைம் குற்றங்கள் குறித்து இணையதளத்தில் புகார் அளிக்கலாம் , மேலும் 1930 என்ற இலவச எண்ணிலும் புகார் அளிக்கலாம் என கூறினார்.

கல்லூரியின் தாளாளர் ஆர். எம்.வீ கதிரேசன் மற்றும் பி.கருப்பையா ஆகியோர் சிறப்புரையாற்றினர். நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமலையரசன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் அனைத்து மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை ராணியார் அரசு மேல்நிலைப்பள்ளியில், மாற்றுத்திறன் கொண்ட 18 வயது உடைய குழந்தைகளுக்கான மருத்துவ மதிப்பீட்டு முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை, சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நேற்று வழங்கினார். அருகில் கலெக்டர் கவிதா ராமு, முதன்மை கல்வி அலுவலர் சாமி சத்தியமூர்த்தி, நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில், துணைத்தலைவர் லியாக்கத் அலி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

Owned & Published by **S.SIVASAKTHIVEL**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudhukkottai, and Printed By: **K.SELVARAJ** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.SIVASAKTHIVEL**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old No.112, New No : 235, 4th Floor, Angappa Naicken Street, Parrys, Chennai-1. PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# துபாய் கண்காட்சியில் தமிழ்நாட்டின் அரங்கம் திறப்பு

# மக்களை முட்டாளாக்குவதற்கே திராவிட மாடல் பட்ஜெட்





# சுயமரியாதை திருமணங்களுக்கு நாடு முழுவதும் அங்கீகாரம்


| சென்னை / புதுக்கோட்டை | 26.03.2022 | varalaruu.com | பக்கம் : 4 | ரூ. 5 |
|---|---|---|---|---|

புதுகை

வரலாறு

நாளிதழ்